# பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு - முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பார்ந்தவர்களே! பொதுக்காலத்தின் நான்காம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இன்றைய வாசகங்கள் வல்லமையுள்ள இறைவனின் கட்டளைகளுக்கும், அவரது இரக்கம் நிறைந்த போதனைகளுக்கும் செவிகொடுத்து ஏழைகள்மட்டில் இரக்கம் உடையவர்களாகவும், எளிய மனம் கொண்டவர்களாகவும் வாழ நம்மை அழைக்கின்றது.

இயேசுவின் போதனைகளில் பாகுபாடின்றி உலக மக்கள் அனைவராலும் கவரப்பட்டது மலைப்பொழிவு. இம்மலைப்பொழிவு நேற்று, இன்று, நாளை என்று முக்காலங்களையும் கடந்து, எக்காலத்துக்கும் பொருத்தமானதாக நம் வாழ்க்கைச்சூழலுக்கு ஏற்ற நற்சிந்தனைகளை உள்ளடக்கியது.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் செப்பனியா மனத்தாழ்மையோடு வாழவும், நாம் வாழும் சமூகத்தில் நீதியை நிலைநாட்டவும், தீமையை விட்டு விலகி, நன்மையின் தூதுவர்களாக வாழ வலியுறுத்துகின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் நாம் எத்தகைய நிலைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம்? எத்தன்மை உடையவராய் வாழ்கின்றோம்? கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்கின்றோமா? என்று சிந்திக்கத் தூண்டுகிறார்.

கடவுளின் முன்னிலையில் எதுவும் நிரந்தரமானதாகவோ, உயர்வானதாகவோ கருதப்படுவதில்லை. உலகம் வெறுப்பவற்றையும், மடமை எனக் கருதுபவற்றையும் கடவுள் தேர்ந்து கொள்கின்றார். மனிதர்கள் தகுதி இல்லாதவர்கள் என ஒதுக்குபவர்களே கடவுளின் பார்வையில் தகுதி உடையவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். மலைப்பொழிவில் இயேசு கூறும் எட்டுப் பேறுகளுக்கு நாம் தகுதி உள்ளவர்களாக இருக்கின்றோமா? இந்த பேறுபெற்ற எட்டு நிலைகளின் நோக்கமே கடவுளின் ஆசீரை நமக்கு வழங்கி, அதன் வழியாக நம்மைப் புனித வாழ்வுக்கு இட்டுச் செல்வதாகும். இத்தகைய பேறுபெற்ற நிலைக்கு நாம் நம்மைத் தகுதி உள்ளவர்கள் ஆகும் வரம் வேண்டி இப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை (செப்பனியா 2: 3, 3: 12-13)

ஏழைகள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள், ஏழைகளாய் வாழ்வதே சாபக்கேடு என்ற எண்ணம் உடைய காலக்கட்டத்தில் வாழ்ந்த இறைவாக்கினர் செப்பனியா ஆண்டவரின் கட்டளைகளைக் கடைப்பிடித்து நேர்மையை நாடவும், மனத்தாழ்ச்சியோடு ஆண்டவரைத் தேடவும் அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவரின் சினத்தின் நாளில் ஏழைகளுக்குப் புகலிடம் உண்டு என்று ஆறுதல் கூறும் முதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (1 கொரிந்தியர் 1: 26-31)

உலகம் மடமை எனக் கருதுபவற்றைக் கிறிஸ்து தேர்ந்து கொண்டார். யூத மக்கள் அவமானச் சின்னமாகக் கருதிய சிலுவையின் மூலமே நமக்கு மீட்பு தந்தார். அந்த அளவிற்கு இறைமகன் தாழ்ச்சி கொண்டார். மனத்தாழ்ச்சி கொண்ட இயேசுவின் ஞானத்தின்மீதே பெருமை பாராட்டி, அந்த ஞானத்தை நாமும் நிறைவாகப் பெற்றிட இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எளிய உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்று மொழிந்த எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் எளிய மனம் கொண்ட எம் திருத்தந்தைக்கு நல்ல உடல்நலமும், பலமும் தந்து பாதுகாத்திடவும், மேலும் ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் தம் மந்தையை அன்புள்ளத்தோடு வழிநடத்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. துயறுருவோர் பேறுபெற்றோர் என்று கூறிய இறைவா!

மிகப்பெரும் நாடுகள், பிற நாடுகளின் மீது தங்களது ஆதிக்க மனப்பான்மையைக் காட்டி நசுக்கிடாமலும், பிற நாடுகளின் வளர்ச்சிக்கு உதவிடும் நல் மனம் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. இரக்கமுடையோர் பேறுபெற்றோர் என்ற எம் இறைவா!

நீதிக்காகவும் உண்மைக்காகவும் போராடி, பல அல்லலுறும் நல் உள்ளங்களின்மீது உமது இரக்கத்தைத் தந்தருளும். அவர்களின் போராட்டங்கள் அதிகார நிலையில் உள்ளவர்களின் மனதை அசைத்து, வேண்டல்கள் நிறைவேறிட உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. கனிவுடையோர் பேறுபெற்றோர் என்று உரைத்த எம் இறைவா!

நீர் படைத்து எங்களுக்குக் கொடையாக அளித்த இயற்கையைச் சரிவர பாதுகாக்காமல், அழிவுக்கு உள்ளாக்கிய தருணங்களுக்காக மனம் வருந்துகிறோம். சுற்றுச்சூழலைப் பாதுகாத்து நல்ல பாதுகாப்பான இயற்கைச் சூழலை எதிர்கால சந்ததியினருக்கு வழங்கிட வேண்டிய ஞானத்தைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்று மொழிந்த எம் இறைவா!

நாங்கள் எங்களது வாழ்வில் ஏற்படும் இன்னல்களை உமது அன்பின் பாதையில் ஏற்று வாழ்ந்திடவும், துன்புறும் ஏழைகள், அனாதைகள், முதியோர், நோயுற்றோருக்குக் கருணைக் கண்கொண்டு ஆதரவுக் கரம் நீட்டவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி ஞா. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com